**செய்தி வெளியீடு எண்: 94** **நாள்: 11.02.2013**

## தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் 46வது கிளை 7 ஆண்டுகளுக்கு பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, வேளச்சேரி, தண்டீஸ்வரர் நகரில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத்துறை அமைச்சர் மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் ஆகியோர்களின் முன்னிலையில் திறந்து வைக்கப்ட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜு அவர்கள், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் 46 ஆம் கிளையினை, எண். 51 A, வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரர் நகர், வேளச்சேரியில் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் புதிய கிளை ஏற்கனவே கடந்த ஏப்ரல் 2006ம் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 7 ஆண்டுகளுக்கு மேல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வேளச்சேரியில் புதிய கிளை ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

TNSC BANK என்று தமிழக மக்களால் நன்கு அறியப்பட்டுள்ள இந்த வங்கி 108 ஆண்டுகால பாரம்பரியம் கொண்டது. 1905 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இவ்வங்கி, கிராமங்கள் வரை ஊடுருவிச் சென்று சிறப்பான முறையில் பணியாற்றி வரும் தமிழகக் கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பிற்குத் தலைமையேற்று வழி நடத்தி வருகிறது. இந்தியாவில் உள்ள மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளில் பல்வேறு சிறப்புகளையும் விருதுகளையும் பெற்றுள்ள இவ்வங்கி தொடர்ந்து இலாபகரமாக இயங்கி வருவது தனிச் சிறப்பாகும். வேளாண் தொழிலை மேம்படுத்தவும், விவசாய உற்பத்தியைப் பெருக்கிடவும், வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் தமிழக அரசு வழங்கும் பல்வேறு நலத் திட்டங்களை இவ்வங்கி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. மேலும், சென்னை மாநகர மக்களுக்கு வணிக வங்கிகளுக்கு இணையாக பல்வேறு நவீன வங்கிச் சேவைகளையும் இவ்வங்கி சிறப்பாக வழங்கி வருகிறது.

மைய வங்கிச் சேவை (CBS), மின்னியல் வங்கிச் சேவை (E-Banking), இணையதள வங்கிச் சேவை (Net Banking), நாடு முழுவதும் துரித பணப் பரிமாற்றச் சேவைகள் (RTGS/NEFT) என அனைத்து விதமான நவீன வங்கிச் சேவைகளையும் வழங்குவதில் இவ்வங்கி இந்தியாவிலேயே முன்னணித் தலைமைக் கூட்டுறவு வங்கியாகத் திகழ்கிறது. ஏறத்தாழ ரூ. 7500 கோடி அளவிற்கு வைப்பீடுகளும், ரூ. 8200 கோடி அளவிற்கு கடன்கள் நிலுவையும், ரூ. 11,500 கோடிக்கு மேல் நடைமுறை மூலதனமும் கொண்டு வலுவான நிதி நிலையுடன் திகழ்கிறது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜுஅவர்கள் தமிழகத்தின் வேளாண் தொழில் மேம்பாட்டிற்கும், விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கும் இந்த தலைமைக் கூட்டுறவு வங்கி எவ்வாறு சிறப்புற பணியாற்றுகிறது என்பதனை விவரித்தார். வேளச்சேரியில் திறக்கப்பட்டுள்ள இந்த புதிய கிளை, தற்போது வங்கித் துறையில் உள்ள அனைத்து நவீன வங்கிச் சேவைகளையும் உள்ளடக்கிய 'முழுமையான அதிநவீன வங்கிக் கிளை' என்று பெருமிதத்துடன் கூறினார். குறிப்பாக இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஏற்ற வங்கிக் கிளையாக இது திகழும் என்றும், இவ்வங்கியின் பாரம்பரியமான கனிவான சேவையுடன் அதிநவீன துரித வங்கித் தொழில்நுட்பச் சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பொதுமக்களின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் வகையில், CBS, E-Banking, Net Banking, SMS Alert, இணையதளம் வாயிலாக சேவைக் கட்டணம் எதுவுமின்றி மின் கட்டணம் செலுத்துதல், மேலும் சென்னை மாநகராட்சி, BSNL மற்றும் அனைத்து அலைபேசி நிறுவனங்கள், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், அரசு கேபிள் டி.வி., அரசு போக்குவரத்துக் கழகம், விமானப் போக்குவரத்து நிறுவனங்கள், முன்னணி சார்புத் தொடர்பு நிதியங்கள் (Mutual Funds), அனைத்து கடன் அட்டைகள் போன்ற 300 க்கும் மேற்பட்ட அமைப்புகளுக்கு பணம் செலுத்தும் வசதிகள், RTGS/NEFT வாயிலாக நாடு முழுவதும் துரித பணப் பரிமாற்றம் என அனைத்து விதமான நவீன சேவைகளும் இந்த வங்கியால் வழங்கப்படும். பொதுமக்கள் பயனடையும் வகையில், அவர்களது வசதிகளுக்கு ஏற்ப பல்வேறு வைப்பீட்டுத் திட்டங்கள். வீடு கட்டும் கடன், நுகர்வோர் கடன், சம்பளக் கடன், தங்க நகை அடைமானக் கடன், கட்டட அடைமானக் கடன் என பல்வேறு கடன் வசதிகளுடன், குறைந்த வாடகையில் சிறந்த பாதுகாப்புப் பெட்டக வசதியும் இக்கிளையில் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், வணக்கத்துக்குரிய மேயர் திரு. சைதை துரைசாமி ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**